**ஓம் ஸ்ரீ சாயிராம்**
**பிரசாந்தி சந்தேஷ் வினா விடை**

## நேரம் வினா எண் 327
## "இறைவனின் அருளை பெறுவதானல் விளையும் நன்மைகள்"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 23-29 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.

கேள்வி:ஸ்வாமி கடவுளின் கருணையை பெறுவதற்குழ நாங்கள் என்ன செய்ய வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
கடவுளின் அருளை பெறுவதற்கு கடவுளிடம் பக்தி செலுத்துவது ஒன்றே வழியாகும்.உங்களுடைய செல்வம் பாண்டித்யம் அதிகாரம் உடல்உறுதி எதுவும் கடவுளை மகிழ்விக்காது.

ஆழ்ந்த பக்தியை மட்டுமே கடவுள் பார்க்கிறார்.

இராமாயாண காவியத்தில் வருகின்ற குகன் பற்றி உங்களுக்கு தெரியும் அல்லவா.அவரிடம் என்ன பாண்டித்யம் இருந்தது ராமனை மகிழ்விக்க.
ஒன்றுமே இல்லை. அவர் கல்வி அறிவு இல்லாதவர்.

ஸ்ரீ ராமரின் தீவிர பக்தையான சபரி மாதா பற்றி நீங்கள் கேள்விபட்டிருப்பீர்கள்.அவரிடம் என்ன செல்வம் இருந்தது ஸ்ரீ ராமரை ஆகர்ஷிக்க. ஒன்றுமில்லை.

அவர் பரம ஏழையாக இருந்தார்.ஸ்ரீ ராமரின் திருக்கரங்கள் படுவதற்கு பறவையான ஜடாயுவிடம் என்ன சிறப்பு இருந்தது.தசரதருக்கு கூட கிடைக்காத பாக்யம் ஸ்ரீ ராமரின் திருக்கங்களால் இறுதி சடங்கு செய்விக்கப்படுகின்ற பாக்யம் ஜடாயுவிற்கு கிடைத்ததே.

ஆஞ்சனேய ஸ்வாமி குரங்கினம் தானே.திடமான நம்பிக்கை மற்றும் முழுமையான சரணாகதி இவற்றால் அவர் கொடுக்கப்பட்ட காரியங்கள்

அனைத்திலும் வெற்றி பெற்றதுடன் ஸ்ரீ ராமரின் பக்தர்களால் வழிபடபடுகின்ற கடவுளாகவும் ஆனார்.ராமாவதார காலத்திலிருந்து அவருடைய வழிபாடு தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

மஹாபாரதமும் பாண்டவர்களின் ராணியான த்ரௌபதி தேவியை ஸ்ரீ கிருஷ்ணரின் மிகச்சிறந்த பக்தை அதாவது இன்பத்திலும் துன்பத்திலும்-சுகத்திலும் துக்கத்திலும்- அரண்மனையில் இருந்தாலும் காட்டில் இருந்தாலும்-எப்போதும் அவர் உயர்ந்த பக்தையாக இருந்தார் என்று கூறுகிறது.

பாண்டவர்களும் ஸ்ரீ கிருஷ்ணரிடத்தில் ஆழ்ந்த பக்தியும் அபரிமிதமான அன்பும் கொண்டிருந்தார்கள்.அவர்கள் சமநிலைக்கும் சரணாகதிக்கும் எடுத்துகாட்டாக திகழ்ந்தார்கள்.

தர்மராஜா கிருஷ்ணரின் தலையாகவும்,பீமன் தோளாகவும்,அர்ஜுனன் இதயமாகவும், நகுல சகாதேவர்கள் கிருஷ்ணரின் பாதமாகவும் இருந்தார்கள்.இதுவே உண்மை பக்தியாகும்.ஒரு சிறந்த பக்தனின் அடையாளம் இது தான்.

பாகவதத்தில் கோபிகைகள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது அல்லவா. அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரிடம் கொண்ட மதுரபக்தி முழு அன்பு மற்றும் சரணாகதியுடன் கூடியதாக இருந்தது.அது பரிசுத்தமான இனிமைநிறைந்த முன்னுதாரணமான பக்தியாகும்.

இலை கிளை பூ புதர் முள் அனைத்திலும் அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரையே கண்டார்கள்.இரட்டைதன்மை இல்லாத ஏகாக்கிரக நிலையில் இருந்தார்கள்.கிருஷ்ணரிடமிருந்து ஒரு நொடிப்பொழுது பிரிவதை கூட அவர்களுக்கு துன்பத்தை கொடுத்தது.

தென்னிந்தியாவில் இருந்த சங்கீத வித்துவான் தியாகராஜர் பற்றி கேள்வி பட்டிருக்கிறீர்கள் தானே.செல்வங்களை பெறுவது சுகமா அல்லது இறைவனுடைய சந்நிதியை அணுகியிருப்பது சுகமா என பாடினாரே.

ராமதாஸ் சூர்தாஸ் கபீர் துக்காராம் துளசிதாஸ் ஜெயதேவர்,மீரா இவர்கள் அனைவரும் பக்திக்கு இலக்கணமானவர்கள்.இவர்கள் வரலாறு இன்றளவும் பேசப்படுகிறது.

அதையெல்லாம் கேட்பதால் மட்டுமே நீங்கள் கடவுளின் அருளுக்கு பாத்திரமாகி விடுவதோடு கடவுளின் அருள் மீது உங்களுக்கு பிரத்யேக உரிமையே வந்து விடுகின்றது.

இது எப்படி என்றால் திருமணமானவுடனே கணவனின் சொத்துக்களின் மீது மனைவிக்கும் பாத்யதை வந்து விடுகிறது அல்லவா அது போலத்தான்.திருமாங்கல்யம் என்ற மங்கலசூத்ரம் திருமணத்தில் கழுத்தில் ஏறியவுடன் இது வந்து விடுகிறது.

அது போல் பக்தியானது இறையருளுக்கு பாத்திரமானவனாக உரிமை உடையவனாக ஆக்கிவிடுகிறதுகடவுள் பக்தி என்பது மிக மிக முக்கியமானதாகும்.பெரும்பாலானவர்களுக்கு அதுவே தெய்வீக த்தை உணர்வதற்கான ஆன்மீக பாதையாகவும் இருக்கிறது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி எங்களுக்கு ஏன் கடவுளின் அருள் கிடைப்பதில்லை

ஸ்வாமியின் பதில்:அப்படி நினைப்பது சரியல்ல. தவறானது.கடவுளின் அருள் அனைவருக்கும் ஒரே மாதிரியாக கொடுக்கப்பட தயாராக இருக்கின்றது.கடவுள் ஜாதிய இன தேசாபிமான பாலின பாகுபாடுகள் பார்ப்பதில்லை.உங்களிடம் தான் குறை உள்ளது.கடவுளின் அருளை நிரப்பி கொள்ள உங்கள் உள்ளமெனும் பாத்திரத்தை காலியாக்கி சுத்தமானதாக வைத்திருக்க வேண்டும்.மழை நீரை சேகரித்து கொள்ள வேண்டுமென்றால் ஒரு பாத்திரத்தை திறந்து வைக்க வேண்டும் அல்லவா.பாத்திரத்தை தலைகீழாக கவிழ்த்து வைத்தால் பயன் ஏதும் இல்லை.அது போல் உங்கள் ஹிருதயத்தை எப்பொழுதும் சுத்தமாக இறையருளை பெறுவதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும்.இறையருளை பெறுவதற்கு உங்கள் மனதை உள்புறமாக திருப்ப வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி உங்கள் அருளுரைகளை கேட்கின்ற நாங்கள் பாக்கியசாலிகள்
இது போன்ற வாய்ப்பு எத்தனை பேருக்கு கிட்டும்.
அனைத்தும் உங்களுடைய தெய்வீக அருளன்றோ.
ஸ்வாமி இதை தக்க வைத்துக் கொள்ள நாங்கள் என்ன செய்ய வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில் :
உலகிலுள்ள கோடிக்கணக்கான பக்தர்களிலே எத்தனை பேருக்கு இங்கே புட்டபர்த்திக்கு வருகின்றபாக்யம் கிடைத்தது.உங்களுடைய முந்தைய பல பிறவிகளின் நற் கருமங்களின் பயனாலே தான் நீங்கள் இங்கே வர முடிந்தது.நம் கல்வி நிலையத்தில் பயிலுகின்ற சில ஆயிரம் மாணவர்களிலே எவ்வளவு பேருக்கு ஸ்வாமி யுடன் தங்கிவிடுகின்ற பேறு கிடைத்துள்ளது. அதிலும் ஒரு சிலருக்குத்தான் என்னுடன்

கொடைக்கானல் வருகின்ற வாய்ப்பும் கிட்டியது.இந்த இறையருளை நீங்கள் பாதுகாத்து பத்திரபடுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு நூல் கண்டை உபயோகப்படுத்தும் போது தவறுதலாக கீழே போட்டுவிட்டால் நூலெல்லாம் தரையில் சிதறி விடுமல்லவா.அதை திரும்ப சுற்றிவைப்பது என்பது எவ்வளவு கடினமான வேலை.அது போலவே உங்களது நல்ல விதியானது முந்தைய பிறவிகளிலே நீங்கள் செய்த நற்கருமங்களின் பயனான ஒரு நூல் கண்டு தான்.தவறுதலாக அதை தொலைத்து விட்டால் திரும்ப பெற முடியாது.
நூல் கண்டின் மத்தியில் இருக்கின்ற அட்டை போன்றதுதான் இறை நம்பிக்கை.

அதை சுற்றிய நூலாக இருப்பது உங்களுடைய முந்தைய நற்கருமங்கள் ஆகும்.அதை அலட்சியபடுத்தவோ சாதாரணமாகவோ எடுத்து கொள்ளவோ வேண்டாம்.அலட்சியமும் கவனக்குறைவும் ஆன்மீக வளர்ச்சியை பாதிக்கும்.

அடுத்த கேள்வி:ஸ்வாமி உங்களுடைய பேரருள் ப்ராரப்தம் என்னும் ஊழ்வினையிலிருந்து எங்களை எவ்வாறு காப்பாற்றுகிறது என்பதை எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இறைவனின் அருளும் இறை சங்கல்பமும் எபபேற்பட்ட ஊழ்வினையையும் மாற்ற வல்லது.அன்பேகடவுள்.அவருடைய எல்லையற்ற கருணை உங்களுடைய ப்ராரப்த கர்மா வை மாற்றி அதன் விளைவுகளிலிருந்து உங்களை காப்பாற்றுகிறது.பக்தன் தன்னுடைய மனச்சிறையில் இறைவனை பிடித்து வைக்க முடியும்.இறைபக்தியினால் இந்த உலகில் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை.கடவுளின் அனுக்ரஹம் ஊழ்வினையின் விளைவுகளை முற்றிலுமாக அகற்றி உங்களை காத்து நிற்கும்.

மருந்து கடையில் பல மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.அவற்றின் மேலே கால முதிர்வு தேதி குறிப்பிட பட்டுள்ளது.அந்த தேதி கடந்து விட்டால் மருந்து தன் வீரியத்தை இழந்து பயனளிக்காமல் போய் விடுகிறது.கடவுளும் அது போலவே உங்கள் ப்ராரப்த கர்மாவின் மீது கால முதிர்வு தேதியை குறிப்பிட்டு விடுகிறார்.அந்த தேதி தாண்டிவிட்டால் உங்கள் கஷ்டங்கள் முடிவுக்கு வருகின்றன.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி நாங்கள் ஆன்மீக சாதனைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தால் இறையருள் எங்களுக்கு நிச்சயம் கிட்டிவிடும் அல்லவா.

ஸ்வாமியின் பதில் :
நிச்சயமாக கிட்டிவிடும்.ஏன் உங்களுக்கு இந்த சந்தேகம்.
நீங்கள் உங்கள் வளர்ப்பு பிராணிக்கு தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உணவு கொடுத்து வந்தால் நீங்கள் அழையாமலேயே அந்த நேரத்திற்க்கு அது வந்து நிற்கும். ஒரு விலங்கே பழக்கத்திற்கு கட்டுப்படும் போது இறைவன் கட்டுப்பட மாட்டாரா.

ஆன்மீக பயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலமாக நீங்கள் இறையருளுக்கு நிச்சயம் பாத்திரமாவீர்கள்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி தங்களின் பெருங்கருணையினாலும் அனுக்ரஹத்தால் நாங்கள் உங்கள் அருகாமையிலே இருந்து கொண்டு தங்களுடைய தர்ஷன் ஸ்பர்ஷன் சம்பாஷன் ஆல் தெய்வீக ஆனந்த்தை அனுபவித்து கொண்டு இருக்கின்றோம்.இது ஒன்று மட்டுமே ஊழ்வினை பயன்களிலிருந்து நாங்கள் விடுபட போதாதா.வேறு ஆன்மீக பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டுமா.

ஸ்வாமியின் பதில் :
நீங்கள் இப்போது அனுபவிக்கின்ற தெய்வானந்தமும் உங்களின் முந்தைய பிறவிகளிலே நீங்கள் செய்த நற்கருமங்களின் பயனும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையதாகும்.பெரு மழை பெய்யும் போது மழை நீர் மண்ணுக்குள் உறிஞ்சப்படுகின்றது.உங்களுடைய நிலையும் அப்படித்தான்.பக்தி உறுதியானதாக இருப்பதில்லை.மழை பெய்யும் போது ஆற்று நீரில் வெள்ளம் உண்டாகி அது வேகமாக பாயும் அல்லவா.

அது போலவே நீங்கள் என் அருகாமையில் இருப்பது என்பது மழை நீர் போலாகும்.அதனுடன் உங்கள் முந்தைய பிறவியின் நற்கருமங்கள் சேரும் போது நீங்கள் அனுபவிக்கின்ற தெய்வானந்தம் பல மடங்கு அதிகரிக்கும்.

கடவுளின் அருள் என்பது மழை பொழிவது போலாகும்.உங்களுடைய முந்தைய பிறவிகளின் நற் கருமங்களின் பயனாலே கடவுள் அருளை நீங்கள் நீங்கள் பெறுகிறீர்கள்.

இந்த நற்பேற்றினை நல்ல வாய்ப்பை விட்டுவிடாமல் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.கிணற்றிலிருந்து வாளி நிறைய நீர் இறைக்கிறீர்கள்.

அதனை நீங்கள் தான் கை நீட்டி இழுத்துக் கொள்ள வேண்டும்.அதை தவற விட்டால் நீரை சேகரிக்க முடியாது.

நீங்கள் இறைவன் மீது தீவிர அன்பு செலுத்துவதன் மூலம் எதையும் சாதிக்க முடியும்.பக்தனின் முயற்ச்சி அதிகரிக்கும் போது இறைவனின் அருளும் அதிகரித்து வெற்றியை தேடி தரும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமி அருளைரைகளை மேலும் கேட்டு மகிழ்வோம்.

**ஜெய் சாயிராாம்**